<u>2026 ஜூலை மாதம் 08– ஆம் தேதி புதன்கிழமை</u>

<u>கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி</u>

<u>S.C. நெம்பர் : 11/2026</u>

2026–ஆம் ஆண்டு ஜூலை மாதம் 08– ஆம் தேதி புதன்கிழமை திருமதி.T.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW4 (LW4) – அசோக் |
| தகப்பனார் பெயர்: | வேல்பாண்டியன் |
| ஊர்: | சின்னமனூர் |
| வட்டம்: | உத்தமபாளையம் |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | தலைமை காவலர், சின்னமனூர் காவல்நிலையம் |
| வயது : | 45 |

08.07.2026

(1 முதல் 7 எதிரிகள் ஆஜர். எதிரிகளின் வழக்கறிஞரும் ஆஜர்).

(சாட்சி அழைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட திரு.G.முத்துக்குமார், தலைமை காவலர் எண்.803 அவர்களால் அடையாளம் காணப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை:–**

1. நான் தற்சமயம் தேனி மாவட்டம், சின்னமனூர் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 09.04.2024ம் தேதி நான் தேனி மதுவிலக்கு அமலாக்கப்பிரிவில் பணியிலிருந்தபோது, இரவு சுமார் 9.00 மணிக்கு இரகசிய தகவாளி நிலையம் ஆஜராகி அன்னஞ்சி, சுடுகாடு பகுதியில் கஞ்சா புழக்கத்தில் உள்ளதாக தகவல் தெரிவித்தார். அந்த தகவலை நான் காவல் ஆய்வாளருக்கு தெரிவித்து, அவரது அனுமதியுடன் என்னுடன் பணிபுரியும் முதல்நிலை காவலர் 1019 திரு.ஸ்ரீதர், முதல்நிலை காவலர் முத்துச்செல்வம், நுண்ணறிவு பிரிவு காவலர் 1870 முத்துக்குமரன் ஆகியோர்களுடன் இரகசிய

தகவாளியை அழைத்துக்கொண்டு அன்னஞ்சி, சுடுகாடு பகுதிக்கு இரவு சுமார் 09.45 மணிக்கு சென்றோம்.

2. சுடுகாடு பகுதியில் இரகசிய தகவாளி அங்கிருந்தவர்களை அடையாளம் காண்பித்து, அங்கிருந்து சென்றுவிட்டார். உடனே நாங்கள் அங்கிருந்த நான்கு நபர்களை பிடிக்க முயற்சித்த போது, அதிலிருந்த இருவர் அங்கிருந்து தப்பிச்சென்றுவிட்டனர். நாங்கள் இருசக்கர வாகனத்திற்கு சுடுகாடு பகுதிக்கு சென்றோம். சுடுகாட்டில் இருந்த இரண்டு நபர்களை பிடித்து அவர்களின் பெயர் விலாசம் விசாரித்து, அந்த இடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த TN 67 AR 8003 என்ற பதிவெண்கொண்ட டிஸ்கவர் இருசக்கர வாகனத்தை சோதித்து பார்த்தபோது, முன்பக்க டேங்க உறையில் கஞ்சா பொட்டலம் இருந்தது.

3. கஞ்சா இருந்தது சம்பந்தமாக அந்த இடத்தில் இருந்த அன்னஞ்சியை சேர்ந்த ஆஜர் எதிரிகள் 1வது எதிரி காளி மற்றும் 2வது எதிரி சசி ஆகிய இருவரையும் விசாரித்த போது சரியான தகவல் தெரிவிக்கவில்லை. தப்பியோடிய இருவரின் பெயர்கள் முருகன் மற்றும் அசார் என்று தெரிவித்தார்கள். கஞ்சா வைத்திருந்தது சம்பந்தமாக சரியான தகவலை தெரிவிக்காததால் காவல்நிலையத்திற்கு அழைத்துச்சென்று விசாரிப்பதற்காக 1வது எதிரி காளி என்பவரை நானும், முதல்நிலை காவலர் முத்துச்செல்வமும் முத்துச்செல்வத்தின் இருசக்கர வாகனத்தில் அழைத்துக்கொண்டும், மற்றொரு சம்பவ இடத்தில் இருந்த TN 60 J 2390 இருசக்கர வாகனத்தில் 2வது எதிரி சசி என்பவரை காவலர் ஸ்ரீதரும், முத்துக்குமரனும் ஏற்றிக்கொண்டும் வந்தார்கள்.

4. கஞ்சா வைக்கப்பட்டிருந்த டிஸ்கவர் இருசக்கர வாகனம் ஸ்டார்ட் ஆகாததால் அந்த வாகனத்தின் முன்பக்கத்தில் இருந்த கஞ்சாவை எடுத்து, TN 60 J 2390 என்ற ஸ்டார் சிட்டி வாகனத்தில் வைத்துக்கொண்டு, இரண்டு வாகனங்களும் எதிரிகளுடன் நாங்கள் அன்னஞ்சி, காளியம்மன் கோவில் அருகே சென்றபோது, எதிரிகள் காளி மற்றும் சசி ஆகிய இருவரும்

வாகனத்திலிருந்து குதித்து, திருவிழா நடைபெற்று கொண்டிருந்த கூட்டத்திற்குள் சென்றார்கள். அப்போது காவலர் ஸ்ரீதரும், முத்துக்குமரனும் அவர்கள் இருவரையும் பிடித்து வாகனத்தின் ஏற்ற முற்பட்டப்போது, அங்கிருந்த பின்னர் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த ஆஜர் எதிரிகள் 3 வது எதிரி அஜித், 4 வது எதிரி சுபாஷ், 5 வது எதிரி மனோஜ், 6 வது எதிரி முத்துராஜ் ஆகியோர்கள் போலீசாருடன் வீண்வாக்குவாதம் செய்தார்கள்.

5. அவர்களுடன் எதிரிகள் காளி மற்றும் சசி ஆகிய இருவரும் கஞ்சா வைத்துள்ளனர் என்று தெரிவித்து, மதுவிலக்கு போலீசார் என்று அடையாள அட்டையை காண்பித்த பிறகும், போலீசார் என்று தெரிந்தே, ஆபாசமாக திட்டி, எதிரிகள் காளி, சசி, அஜித், சுபாஷ், மனோஜ், முத்துராஜ் மற்றும் சிலர் சேர்ந்து காவலர்கள் ஸ்ரீதரையும், முத்துக்குமரனையும் மாறி மாறி தாக்கி, கழுத்தை நெறித்து கொலை செய்ய முயற்சி செய்தார்கள். நாங்கள் அவர்களை தடுக்க முற்பட்டப்போது எங்களையும் தாக்க வந்தார்கள். உடனே நான், அல்லிநகரம் காவல்நிலையத்திற்கு தகவல் தெரிவித்தேன்.

6. எதிரிகள் தாக்கியதில் காயம்பட்ட ஸ்ரீதர் மற்றும் முத்துக்குமரன் ஆகிய காவலர்களை வழிப்போக்கு ஆட்டோவில் தேனி, க.விலக்கு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். அதன் பின்னர், எதிரி காளி இருசக்கர வாகனத்தில் இருந்த கஞ்சாவை நாங்கள் இருக்கும்போதே, தரையில் வீசி எறிந்தார். சிறிது நேரத்தில் அல்லிநகரம் காவல்நிலையத்திலிருந்து காவல்நிலைய காவலர்கள் வந்தவுடன் எதிரிகள் தப்பியோடி விட்டனர். பின்னர் வீசி எறியப்பட்ட கஞ்சாவை நான் சேகரித்து, மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு காவல்நிலையத்திற்கு கொண்டு வந்து ஒப்படைத்தேன். எதிரிகள் முருகன், அசார், காளி, சசி ஆகியோர்கள் சட்ட விரோதமாக கஞ்சா வைத்திருந்த குற்றத்திற்காக நடவடிக்கை எடுக்குமாறு மதுவிலக்கு அமலாக்கப்பிரிவில் புகார் கொடுத்தேன்.

7. அது சம்பந்தமாக மதுவிலக்கு அமலாக்கப்பிரிவில் மேற்படி நான்கு எதிரிகள் மீது குற்ற எண்.362/2024 பிரிவுகள் NDPS சட்டத்தின்கீழ் முதல்தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. காவலர்களை தாக்கியது சம்பந்தமாக காவலர் ஸ்ரீதர் கொடுத்த புகாரின்பேரில் அல்லிநகரம் காவல்நிலையத்தில் எதிரிகள் மீது கொலை முயற்சி வழக்கு பதிவு செய்யப்பட்டது. வழக்கு சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை காவல்நிலையத்தில் வைத்து 10.04.2024ம் தேதி விசாரித்தார்.

<u>4 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –</u>

8. ரகசிய தகவல் எவ்வாறு கிடைத்தது என்றால் தகவாளி நேரில் ஆஜராகி தகவல் சொன்னார். எந்த தேதியில் தகவல் கிடைத்தது என்றால் 09.04.2024ம் தேதி இரவு 9.00 மணியாகும். என்னிடம் மட்டும் ரகசிய தகவல் சொல்லப்பட்டது என்றால் சரிதான். தகவல் கிடைத்தவுடன் யார் யாருடைய வாகனத்தில் சென்றோம் என்றால் நான் முத்துச்செல்வனின் இருசக்கர வாகனத்திலும், ஸ்ரீதர் முத்துக்குமரனின் இருசக்கர வாகனத்திலும் காவல்நிலையத்திலிருந்து 9.30 மணிக்கு புறப்பட்டோம். எங்களுடன் ரகசிய தகவாளி உடன் வந்தார் என்றால் சரிதான். அவர் யாருடன் வந்தார் என்றால் அவர் தனியாக சென்றுவிட்டார்.

9. அன்னஞ்சி சுடுகாடு பகுதி எனக்கு எப்படி தெரியும் என்றால் நான் அல்லிநகரம் காவல்நிலையத்தில் பணிபுரிந்துள்ளதால் எனக்கு தெரியும். யார் முதலில் சுடுகாட்டிற்கு சென்றார் என்றால் தகவாளி சென்றுவிட்டார், அதன் பின்னர் நாங்கள் சென்றோம். 1, 2 எதிரிகள் மற்றும் இருவர் அன்னஞ்சி, சுடுகாட்டில் எந்த திசையில் நின்று கொண்டிருந்தார்கள் என்றால் வடக்குத் திசையில் நின்றுக் கொண்டிருந்தார்கள். தகவாளி அடையாளம் காட்டினார் என்றால் சரிதான். சம்பவத்திற்கு முன்பு அவர்களின் பெயர்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். இதற்கு முன்பு சுடுகாட்டில் கஞ்சா விற்பதாக தகவல் கிடைக்கவில்லை என்றால் சரியல்ல, அதற்கு முன்பும் தகவல் கிடைத்து ரோந்து சென்றுள்ளோம்.

10. ரகசிய தகவாளி அடையாளம் காட்டி என்ன செய்தார் என்றால் அவர் சென்றுவிட்டார். இருசக்கர வாகனத்தில் இருந்த கஞ்சாவை எடுத்து யார் எங்களது இருசக்கர வாகனத்தில் வைத்தார்கள் என்றால் ஸ்ரீதர் எடுத்து, முத்துச்செல்வனின் இருசக்கர வாகனமான ஸ்டார் சிட்டி வாகனத்தில் வைத்தார். சாட்சி மீண்டும் இருசக்கர வாகனத்தில் வைத்ததாக கூறுகிறார். எவ்வளவு எடைகொண்ட கஞ்சா எடுத்தோம் என்றால் சுமார் 1/2 கிலோ ஆகும். முத்துச்செல்வம் இருசக்கர வாகனத்தை ஓட்ட எதிரி காளி நடுவிலும், நான் பின்னால் அமர்ந்து சென்றேன் என்றால் சரிதான்.

11. ஸ்ரீதர் வாகனத்தை வாகனத்தை ஓட்ட எதிரி சசி நடுவிலும், பின்னால் முத்துக்குமரனும் பின்னால் அமர்ந்து சென்றார்கள். நான் சொன்ன தேதியில் அன்னஞ்சி கிராமத்தில் காளியம்மன் கோவில் திருவிழா என்றால் சரிதான். கலை நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருந்தது என்றால் சரிதான். திருவிழாவின்போது அந்த பகுதி காவல்நிலையத்திலிருந்து காவலர்கள் பணியமர்த்தப்படுவார்கள் என்றால் நாங்கள் இருந்ததால் வேறு யாரும் இல்லை. எதிரிகள் காளி மற்றும் சசி ஆகியோர்கள் ஒரே நேரத்தில் தப்பியோட முயற்சித்தார்கள் என்றால் சரிதான், ஓட முயற்சித்தபோது நாங்கள் பிடித்துவிட்டோம். யார் கஞ்சா பொட்டலத்தை கொட்டினார் என்றால் 1வது எதிரி காளி ஆவார். எவ்வளவு நேரம் கழித்து நான் கைப்பற்றினேன் சுமார் ஒருமணி நேரம் கழித்து கைப்பற்றினேன்.

12. எந்த இடத்தில் கொட்டினார் என்றால் காளியம்மன் கோவில் தெற்கு திசையில் கொட்டினார். காளியம்மன் கோவில் எந்த திசையில் வாசல் உள்ளது என்றால் தெற்கு திசையாகும். நான் அல்லிநகரம் காவல்நிலையத்திற்கு தகவல் சொன்னேன் என்றால் சரிதான். அந்த தகவலை யார் பெற்றுக்கொண்டார் என்றால் ஈஸ்வரன் என்ற சிறப்பு சார்பு ஆய்வாளர் ஆவார். எந்த காவலர் சம்பவ இடத்திற்கு வந்தார் என்றார் இரண்டு ரோந்து காவலர்கள் வந்தார்கள், பெயர்

ஞாபகமில்லை. அதன் பின்னிட்டு யாரும் வரவில்லை என்றால் சரிதான். அசிங்கமாக யார் திட்டினார்கள் என்றால் எதிரிகள் தேவிடியா பயல்களா என்று திட்டினார்கள். அனைவரும் மேற்படி அசிங்க வார்த்தைகளை சொல்லி திட்டினார்களா என்றால வெவ்வேறு ஆபாசமான வார்த்தைகளால் திட்டினார்கள். முதலில் யார் திட்டினார்கள் என்றால் எதிரி காளி ஆவார். மேற்படி விபரத்தை ஆய்வாளர் விசாரித்தபோது கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

13. எதிரிகள் ஸ்ரீதரையும், முத்துக்குமரனை எந்தெந்த இடத்தில் தாக்கினார்கள் என்றால் எதிரிகள் காளி, சசி, மனோஜ் மூவரும் முத்துக்குமரனின் கழுத்தை நெறித்தார்கள், மற்ற எதிரிகள் சுபாஷ், அஜித், முத்துராஜ் ஆகியோர்கள் ஸ்ரீதரை அடித்து கழுத்தை நெறித்து கொலை செய்ய முயற்சித்தார்கள். மேற்சொன்ன விபரத்தை ஆய்வாளர் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். காளி, சசி, மனோஜ், சுபாஷ், அஜித், முத்துராஜ் ஆகிய எதிரிகளை சம்பவத்திற்கு முன்பு நான் பார்த்ததில்லை என்றால் சரிதான். அவர்கள் பெயர்கள் பின்பு தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான்.

14. பின்னர் எந்த தேதியில் யாரிடம் கேட்டு தெரிந்து கொண்டேன் என்றால் அன்றைய தேதியில் ஊர்மக்களிடம் கேட்டு தெரிந்து கொண்டேன். எதிரிகளுடன் மற்ற 20 நபர்களின் பெயர்களை தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. எதிரிகளை அதன் பின்பு எப்போது பார்த்தேன் என்றால் காவல்நிலையத்தில் 10.04.2024 ம் தேதி விசாரணையின்போது பார்த்தேன். எத்தனை மணிக்கு பார்த்தேன் என்றால் ஞாபகமில்லை. எதிரிகளை நான் பார்க்கவில்லை என்றால் சரியல்ல.

15. இந்த வழக்கின் விபரங்கள் எனக்கு தெரியாது என்றாலும், என்னுடன் பணிபுரிந்த காவலருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ரகசிய தகவல் கிடைக்கவில்லை என்றாலும், ரோந்துக்கு செல்லவில்லை என்றாலும் சரியல்ல. ஏற்கனவே சீருடையில் இல்லாமல்

அன்னஞ்சிக்கு சென்ற ஸ்ரீதர் மற்றும் முத்துக்குமரனை ஊர்மக்கள் கண்டித்ததால் அவர்கள் கொடுத்த புகாருக்கு அனுசரணையாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் காயம்பட்டவர்களுக்கு எந்த காயமும் ஏற்படுத்தவில்லை என்றால். 4 வது எதிரிக்கும், இவ்வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

**<u>1 முதல் 3 மற்றும் 5 முதல் 7 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1 முதல் 3 மற்றும் 5 முதல் 7 எதிரிகள் தரப்பிற்கு போதுமான காலஅவகாசம் வழங்கியும் குறுக்கு விசாரணை செய்யாத காரணத்திற்காக 1 முதல் 3 மற்றும் 5 முதல் 7 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

**<u>மறு விசாரணை</u>** :– இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 08.07.2026 அன்று புதன்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI Digitally signed by G SREE DEVI Date: 2026.07.08 18:18:41 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
08.07.2026